ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2378/40 - 2024 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2024.04.05

**2378/40 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 31 வது பிரிவில் (4) உபபிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கராண்டுவ கடனீரேரி மீன்பிடி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத் திட்டம்.*

**டக்ளஸ் தேவானந்தா,**
*கடற்றொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2024, மார்ச் 31.*

**கராண்டுவ கடனீரேரி மீன்பிடி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத் திட்டம்**

இலங்கையில் அமைந்துள்ள 116 கடனீரேரிகளுக்கிடையில் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள கராண்டுவ கடனீரேரியின் சுற்றுச்சூழல் நிலையை உறுதியாகப் பேணுவதன் ஊடாக கடனீரேரி மற்றும் அது சார்ந்து மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரத்தைப் பேணுதல் மற்றும் அதனை மேம்படுத்தும் நோக்குடன் இந்த சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், மூலதர்மங்கள் மற்றும் செயற்பாட்டு வழிமுறைகளை உள்ளடக்கி இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த திட்டம் கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு குழுவினால் அனுமதிக்கப்பட்டு கடற்றொழில், நீரியல் வளங்கள் பணிப்பாளருக்கு அனுப்பிய பின், இத்திட்டத்திற்கு சட்டத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுடனான இணக்கத் தன்மையை சரிபார்த்து கடற்றொழில் அமைச்சரின் அனுமதிக்காக அனுப்பப்படும். (31ஆ பிரிவு)

அமைச்சரினால் இந்த திட்டத்துக்கு அனுமதி வழங்கி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் செயல் நிலையை அடையும். (31ஆ 4 வது உபபிரிவு)

61வது பிரிவின் கீழ் தகுந்த விதிமுறைகள் தயாரித்தல் மற்றும் 34 வது பிரிவின் கீழ் பொருத்தமான அறிவித்தல் வெளியிடப்படுவதன் மூலம் அமைச்சரினால் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு செல்லுபடித்தன்மை வழங்கப்படுதல் வேண்டும். (31ஆ 5 வது பிரிவு)

## 01. கடனீரேரி முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழு

2013 இன் 35 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 31 அ பிரிவுக்கு அமைய கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்ட குழு இதன் பின்னர் **"கராண்டுவ கடனீரேரி முகாமைத்துவ - ஒருங்கிணைப்பு குழு" என அழைக்கப்படும்.** (இதன் ஆக்க அமைவு இணைப்பு இல. 01 ஆக தரப்பட்டுள்ளது) இக்குழுவுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட செயலாளரின் தலைமையில் கூடுதல் வேண்டியதுடன் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் இக்குழுவின் செயலாளராக செயற்படுவார்.

## 02. மூலதர்மம்

கடனீரேரி சுற்றுச்சூழற் தொகுதியின் வளங்களை அறுவடை செய்தல், பயன்படுத்தல் மற்றும் நுகர்வு சம்பந்தமான தீர்மானங்கள் கீழ்க்குறிப்பிடப்படும் மூலதர்மம், தொகுதிகளுக்கு அமைய செயற்படுத்தல் வேண்டும்.

- வளங்களை சமமாக பகிருதல்
- சட்டபூர்வமாக
- ஒருங்கிணைப்பு
- வெளிப்படைத் தன்மை
- சூழலுக்கு இணக்கமாக
- வினைத் திறன் மற்றும் செயல்திறன்
- பொறுப்புக் கூறல்
- பொது இணக்கப்பாடு (சாதி, சமய, மொழி, குலம், அரசியல், தொழிற்பலம் இன்றி)
- முறையான பதில்
- கூட்டாண்மை

## 03. கராண்டுவ கடனீரேரி முகாமைத்துவ ஒருங்கிணைப்புத் திட்டம் ஏற்புடைய அதிகாரப் பிரதேசம்

இலங்கையில் தென்மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தின், வெலிகம பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய கராண்டுவ கடனீரேரி நீர்ப்பரப்பு மற்றும் அது சார்ந்து அடையாளம் காணப்பட்டுள்ள 06 கிராம அலுவலர் பிரிவுகளுக்குரிய தரைப் பகுதி (2013 இன் 35 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் திருத்தப்பட்ட சட்டத்தின் மீன்பிடி முகாமைத்துவ பிரதேசங்கள் 31 (1) பிரிவின் கீழ் 1997/19 ஆம் இலக் 2016.12.15 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கராண்டுவ கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ அதிகாரப் பிரதேசமாக இனங் காணப்பட்டுள்ளது.

- பூகோள பகுதி - GPS தரவு அடங்கிய வரைபடத்தின் மூலம் கராண்டுவ கடனீரேரிக்குள் அடையாளம் காணப்பட்ட அதிகாரப் பிரதேசம் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அது இணைப்பு இல. 02 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது.

- கராண்டுவ கடனீரேரியில் அடையாளம் காணப்பட்ட தரைப் பகுதிக்கான எல்லைகள் வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவுகள் 06 ஆகும்.

| | | |
|---|---|---|
| 1. மிரிஸ்ஸ உடுமுல்ல | - | 405 B |
| 2. மிரிஸ்ஸ உடுபில்ல | - | 405 A |
| 3. பண்டாரமுல்ல | - | 407 A |
| 4. தல் அரம்ப வடக்கு | - | 407 D |
| 5. தல் அரம்ப கிழக்கு | - | 407 C |
| 6. கராண்டுவ | - | 408 B |

## 04. நிறுவன கட்டமைப்பு

### செயற்படுத்தும் முறை

கராண்டுவ கடனீரேரிக்குள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் அடங்கலாக கடனீரேரி முகாமைத்துவ குழு 1 ஆகும். (1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்ள் சட்டத்தின் 32 ஆம் பிரிவில் 3 வது உபபிரிவின் கீழ் கடற்றொழில் பணப்பாளர் நாயகத்தினால் மீன்பிடி குழுக்களை பிரகடனப்படுத்தும் 2027/33 ஆம் இலக்க 2017.07.13 ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானி இணைப்பு 03 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | மீன்பிடிக் குழுவின் பெயர் | பதிவிலக்கம் |
|---|---|---|
| 1.1 | கராண்டுவ கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு | திஜதெ/தீ.கமிட்டி/க.க. /01 |

1. கராண்டுவ கடனீரேரிக்குள் செயற்படும் கராண்டுவ கடனீரேரி முகாமைத்துவ குழுவில் 30 உறுப்பினர்கள் அடங்கியிருப்பர்.

2. இக்குழுவின் நிறைவேற்று செயற்குழு (பிரதிநிதிகள் 11 பேர்) மாதத்துக்கு ஒருமுறை கூடுவர்.

3. கடனீரேரி மீனவ குழுவின் பொதுச் சபை இரண்டு மாதத்துக்கு ஒருமுறை இறுதி மாத போயா தினத்தில் கூடுவர்.

4. கடனீரேரி மீனவ குழுவின் வருடாந்த பொதுச்சபை ஒவ்வொரு வருட திசம்பர் மாதத்தில் நடைபெறுதல் வேண்டும்.

5. 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்திற்கு அமைவாக 2013 இன் 35 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திருத்திய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு குழுவின் கட்டமைவு இணைப்பு இல. 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலர்கள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்கியதாகும்.

6. கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு குழு ஒவ்வொரு 03 மாதத்துக்கு ஒருமுறை நடைபெறுதல் வேண்டும். அத்துடன் மாவட்டத்தின் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அதற்கு அழைப்பாளராக செயற்படுவதுடன் மாவட்ட செயலாளரின் தலைமையில் இது நடைபெறுதல் வேண்டும்.

7. அத்தியாவசிய தேவையின்போது அக்குழு குறிப்பிட்ட காலத்துக்கு முன் கூடுதல் வேண்டும்.

## 05. தீர்மானிக்கும் முறை

1. கடனீரேரியில் நீர்வாழின வளங்களை அறுவடை செய்தல், பயன்படுத்தல் மற்றும் நுகர்வு தொடர்பாக தீர்மானம் எடுக்கும் நடைமுறை கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு மற்றும் கராண்டுவ ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் மூலம் இந்த திட்டத்துக்குள் இனம் காணப்பட்ட கொள்கை மற்றும் இணக்கப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. கராண்டுவ ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் தலைவராக மாத்தறை மாவட்ட செயலாளர் செயற்படுவார்.

3. கடனீரேரிக்குள் மீன்பிடி செயற்பாடு மேற்கொள்வது பற்றி கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழு கண்காணித்தல் வேண்டும். யாதேனும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் எழுந்தால் அதனை கராண்டுவ ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவுக்கு முன்வைத்தல் வேண்டும்.

4. கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவுக்கு கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவின் முன்மொழிவுகளை சமர்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்மொழிவு தொடர்பாக கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவினால் பெரும்பான்மை சம்மதத்தை வழங்குவதன் முன்மொழிவை ஏற்றுக்கொண்டு கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் உரையாடலுக்கு மற்றும் தீர்மானத்துக்கு விடுதல் வேண்டும்.

5. கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவின் தீர்மானத்துக்கு கராண்டுவ கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய தரப்பினரினால் சமர்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவில் (இல. 05.1) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மூலதர்மத்துக்கு அமைய கலந்துரையாடப்படல் வேண்டும்.

6. கடனீரேரி சூழல் தொகுதிக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தில் அபிவிருத்தி முன்மொழிவு சமர்ப்பிக்கும்போது அல்லது செயற்படுத்தும்போது கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழு, தொடர்புபட்ட செயற்றிட்டத்துக்கு சார்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை EIA/IEE பெற்றுக் கொள்ளுமாறு இதன் பின்னர் சம்பந்தப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரையைக் கவனத்திற் கொண்ட பின்னர் முன்மொழிவை நிபுணத்துவ சபையின் சிபார்சுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

7. கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு குழு சமர்ப்பித்த முன்மொழிவு தொடர்பாக தீர்மானம் எடுக்க முடியாத சந்தர்ப்பத்தில் அதற்கான தீர்மானம் எடுப்பதற்கு ஒருங்கிணைப்பு குழு, தேசிய மட்டத்தில் குறித்த விடயம் சம்பந்தமாக செயற்படும் நிறுவனங்களின் கருத்துக்களை அறிந்து தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

8. கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழுவினால் கடனீரேரி தொடர்பான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் திட்டத்தை செயற்படுத்தல், கண்காணித்தல், ஒழுங்கமைப்பு மற்றும் பின்னூட்டங்களுக்கு கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 06. கடனீரேரியில் பாதுகாப்பான இயற்கை வளம்

* கடனீரேரி முகாமைத்துவ அதிகாரப் பிரதேசத்துக்குள் உள்ள தரைப்பகுதி/கடனீரேரி நீர், மீன்கள், பறவைகள் அதிலுள்ள நீர் வளங்கள் மற்றும் ஏனைய நீர்வாழிகள் மற்றும் இனம் காணப்பட்ட தீவுகள் அடங்கலாக கண்டத்தாவர சூழற் தொகுதியிலுள்ள சகல தாவரங்களும் கராண்டுவ கடனீரேரிக்குரிய இயற்கை வளங்களாக பெயரிடப்பட்டுள்ளது.

* கண்டத் தாவரம் சார்ந்த பிரதேசங்கள், கடனீரேரி அதிகாரப் பிரதேசத்தை GPS தொகுதியில் குறிப்பிடும் வேளையில் அடையாளம் கண்டு அப்பிரதேச சூழல் விழிப்புணர்வு பிரதேசமாக பெயரிடப்படலாம்.

* நீர்வாழினங்கள் இனப்பெருக்கம் செய்யும் விசேட இடங்களை இனம் கண்டு அந்த இடங்கள் மற்றும் எல்லைகள், மீன் அறுவடை செய்வதற்கு தடை செய்யப்பட்ட பிரதேசமாக பெயரிடப்படும்.

* உணவுக்குப் பயன்படுத்தும் மீன்களை தவிர ஏனைய சகல உயிரினங்கள் மற்றும் உயிரற்ற வளங்கள் கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவக் குழுவின் அனுமதி அல்லது அங்கீகாரமின்றி ஆய்வு செய்தல்/கையகப்படுத்தல்/அழித்தல்/நிரப்புதல் போன்ற விடயங்கள் கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ திட்டத்தை மீறும் விடயங்களாக கருதப்படுவதுடன் இவ்வாறான எவ்வித செயற்பாடுகளும் கடனீரேரி பிரதேசத்துக்குள் மேற்கொள்ளலாகாது.

* கடனீரேரிக்குள் நீரைக் கொண்டுவரும் நீரைக் கொண்டுவரும் கால்வாய்கள் பாதுகாக்கப்பட்டவை, கால்வாய் கரையிலிருந்து மறு கரைக்கு குறைந்த பட்சம் 05 மீற்றர் வீதம் இருத்தல் வேண்டும்.

## 07. கராண்டுவ கடனீரேரிக்குள் அனுமதிக்கப்படும் செயற்பாடுகளும் வரையறைகளும்

1. கராண்டுவ கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவில் பதிவு செய்துள்ள மீனவர்கள் அதிகபட்சம் 30 பேருக்கு கடனீரேரிக்குள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

2. கராண்டுவ கடனீரேரியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் ஒவ்வொறு மீனவர்களும் தன்னிடம் தோணி ஒன்று இருக்குமாயின் அந்த தோணியை கடற்றொழில் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். அத்துடன் அதன் பதிவிலக்கத்தை தெளிவாக காட்சிப்படுத்தும் வகையில் தோணியில் இரு பக்கங்களிலும் காட்சிப்படுத்தல் வேண்டும்.

3. பதிவு செய்துள்ள ஒவ்வொரு மீனவர்களுக்கும் கடனீரேரியில் தொங்கவிடும் வலையைப் பயன்படுத்த முடிவது நாளின் பிற்பகல் 6.00 மணிக்கும் முற்பகல் 8.00 மணிக்கிடயிலான காலப் பகுதிக்குள் மட்டுமாக இருப்பதுடன் இந்த ஒரு சந்தர்ப்பத்துக்குள் தொங்கவிடும் உச்ச வலையின் நீளம் 300 மீற்றராக இருப்பதுடன் (வலை பீஸ் துண்டு 06 வரையாகும்) குறைந்த எல்லை கடனீரேரியில் மீன் அறுவடை செய்யும் அளவு குறையும்போது அது கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவினால் தீர்மானிக்கப்படும்.

4. வருடம் முழுவதும் சகல மீன் வகைகளுக்கும் தொங்கவிடும் வலை பயன்படுத்தக்கூடிய குறைந்த பட்ச கண்ணளவு 3 - 3 1/2 அங்குலமாகும்.

5. கராண்டுவ கடனீரேரியில் மீன்பிடி முகாமைத்துவ குழுவில் பதிவு செய்துள்ள மீனவர்களுக்கு வருட முழுவதும் கடனீரேரிக்குள் வீச்சு வலை பயன்படுத்த முடியும்.

6. கராண்டுவ கடனீரேரிக்குள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அதிகபட்சமாக 10 பதிவு செய்துள்ள தோணிகள் பயன்படுத்த முடியும்.

## கராண்டுவ கடனீரேரிக்குள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய தொழில் முறைகள்

1. வலை தொங்கவிடுதல்
2. வீச்சு வலை
3. தூண்டல் முறை

## 08. கராண்டுவ கடனீரேரிக்குள் தடை செய்யப்பட்ட செயற்பாடுகள்

1. மீன்பிடி தொழில் முறைக்கு தங்கூஸ் வலை பயன்படுத்துவது முற்றாகத் தடையாகும்.

2. சகல இயந்திரப் படகுகள் மற்றும் இயந்திரத் தோணிகள் கடனீரேரிக்குள் பயணிப்பது முற்றாகத் தடையாகும்.

3. நீரின் மேற்பரப்பில் தரையிறக்கக்கூடிய விமானம் கடனீரேரிக்குள் நுழைவது முற்றாகத் தடையாகும்.

4. கடனீரேரிக்குள் :
   * வலை விரித்து நீரில் அடித்தல் மற்றும் மீன்களைப் பயமுறுத்தல்
   * நீரை கலக்குதல்
   * சேற்றை மிதித்து இறால் பிடித்தல்
   * மீன்களுக்கு குத்துதல் (கம்பி கூர்கள் மற்றும் ஈட்டி போன்ற ஆயுதங்கள் மூலம்)
   * வலைக்கூடு பயன்படுத்தி மீன் பிடித்தல் மற்றும் மீன்பிடி சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ள தடை செய்யப்பட்ட தொழில்முறைகளைப் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

5. நாளின் முற்பகல் 8.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரை கடனீரேரியில் வலை விரிப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

6. இரவு காலங்களில் மீன்களுக்கு வீச்சு வலை பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

7. கடனீரேரி நீரின் மேற்பரப்பு மற்றும் கரையில் பாதுகாக்கப்பட்ட இடங்களில் எவ்வித தற்காலிக அல்லது நிரந்தர நிர்மாணிப்புகள் அல்லது நிரப்பலுக்கு பயன்படுத்தலாகாது.

8. கடனீரேரி மீன் வளங்கள், பதிவு செய்துள்ள ஒவ்வொரு மீனவர்களினதும் பொது வளமாகும் என்பதைக் கவனத்திற் கொண்டு கடனீரேரியை துண்டுபடுத்தி உரிமையாக்குவதற்கு எவருக்கும் உரிமையில்லை.

9. கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு முகாமைத்துவ திட்டத்தில் அறிமுகப்படுத்தியுள்ள விடயத்தை மீறுமிடத்து -

* கடனீரேரியில் மீன்பிடி நடவடிக்கைக்குரிய இந்த திட்டத்திலுள்ள விடயங்களை மீறுமிடத்து, கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவினர் சட்டம் மற்றும் இணைக்கப்பாடுகளை மீறும் நபர்களை இனம் கண்டு முதல் அறிவுறுத்தல் விடுக்கப்பட வேண்டும். அத்துடன் இது சம்பந்தமாக கடற்றொழில் திணைக்களத்தின் அதிகாரிகளை அறிவுறுத்தல் வேண்டும். அடிக்கடி இணக்கப்பாடுகளை மீறும் நபரின் மீன்பிடி உபகரணம் சம்பந்தமாக கடற்றொழில் சட்டம் மற்றும் இந்த திட்டத்துக்கு அமைய திணைக்களத்தின் அதிகாரியின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* கடனீரேரியில் செலுத்தப்படும் இயந்திரப் படகு, கண்டத் தாவரங்கள் வெட்டுதல், கடனீரேரியை நிரப்புதல், கடனீரேரியில் மேற்கொள்ளப்படும் நிர்மாணங்கள் தொடர்பாக மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறும் நபருக்கு மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக எந்தவொரு நபரும் மற்றும் நிறுவனமும் வெலிகம பொலிஸில் முறைப்பாடு செய்ய முடியும், இதன்போது அனுப்பும் முறைப்பாடு எழுத்து மூலமாக கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு குழுவின் செயலாளர் மற்றும் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

### 09. கராண்டுவ கடனீரேரி ஒருங்கிணைப்பு திட்டத்துக்கு திருத்தம் முன்வைத்தல்

* கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவின் பொதுச் சபையின் ஊடாக 2/3 பெரும்பான்மையினரால் எடுக்கப்படும் வாக்கெடுப்பின் தீர்மானம் மற்றும் ஒழுங்குவிதிகள் ஒருங்கிணைப்பு குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

* ஒருங்கிணைப்பு குழுவினால் கூடப்படும் கூட்டத் தொடரில் எடுக்கும் ஒழுங்குவிதிகள் வருட இறுதிக்குள் கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்புதல் வேண்டும், இவ்வாறு கிடைக்கும் முன்மொழிவுகள் கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் கடற்றொழில் ஒழுங்குவிதிக் கோவைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.


### இணைப்பு - 01

1. மாவட்ட செயலாளர்.
2. மாவட்ட உதவி கடற்றொழில் பணிப்பாளர்.
3. கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் - அதிகாரிகள் இருவர்.
4. கராண்டுவ கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ குழுவின் சார்பில் 04 உறுப்பினர்கள்.
5. பிரதேச செயலாளர் - வெலிகம.
6. தலைவர் பிரதேச சபை - வெலிகம.
7. நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர்.
8. மாகாண கடற்றொழில் பணிப்பாளர்.
9. கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்.
10. நாரா நிறுவனத்தின் அதிகாரி ஒருவர்.
11. நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகாரசபையின் அதிகாரி ஒருவர்.
12. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரி ஒருவர்.
13. வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்.
14. வன பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்.
15. சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரி ஒருவர்.
16. காணி அமைச்சின் அதிகாரி ஒருவர்.
17. பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்.
18. கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்.
19. இலங்கை கடற்படையின் அதிகாரி ஒருவர்.

### சட்டத்திற்கு அமைய குழுவுக்குத் தேவையான வேறு எந்த நிறுவனத்தின் கீழும்

20. நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்.
21. கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்.
22. பிரதேசத்தின் சமூக அமைப்பின் - கராண்டுவ கடனீரேரி பாதுகாப்பு அமைப்பின் பிரதிநிதி இருவர்.
23. கராண்டுவ கடனீரேரி சார்ந்துள்ள விவசாய அமைப்பின் பிரதிநிதி இருவர். (உடுபில/உடுமுல்ல)
24. காணி கையாளும் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர்.
25. மாவட்ட திட்டமிடல் அலுவலகத்தின் அதிகாரி ஒருவர்.

**இணைப்பு - 02**


GARANDUWA KALAPUWA
Scale 1:12,000
Garanduwa Kalapuwa
SEA
A2
SOUTHERN PROVINCE
Legend
Important Place
Railway
Main Road
Secondary Road
Track
Foot Path
Bund / Dam
Channel
River / Stream / Canal
Tank
Compiled Using 10,000 Database.
Prepared by Survey Department of Sri Lanka, Special Mapping Unit - 2018.

**இணைப்பு - 03**

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம்**

1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்.

**அறிவித்தல்**

1997/19 ஆம் இலக்க 2016.12.15 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கராண்டுவ கடனீரேரியின் மீன்பிடி முகாமைத்துவ பிரதேசத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் அறியத் தரப்பட்டுள்ளது.

| | கராண்டுவ கடனீரேரி முகாமைத்துவ குழுவின் பெயர் | பதிவிலக்கம் |
|---|---|---|
| 1. | கராதுவ கடனீரேரி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ.கமிட்டு/க.க/01 |

எம். சீ. எல். பர்னாந்து,
பணிப்பாளர் நாயகம்,
கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்,

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை.
2017, யூலை 10.

EOG 04 - 0049